# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 28 வெள்ளிக்கிழமை 13.06.2025 கதிர் 224



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel









## மண்முனை தென்மேற்கு சபையை இம்முறை இழந்தது தமிழரசுக் கட்சி

### சுயேச்சைக் குழு - பிள்ளையான் அணி இணைந்து ஆட்சி

மட்டக்களப்பு, ஜூன் 13

மண்முனை தென்மேற்கு பிரதேச சபையில் பந்து சின்ன சுயேச்சைக் குழுவும் கிழக்குத் தமிழர் கூட்டமைப்பும் இணைந்து ஆட்சியைக் கைப்பற்றியுள்ளன.

மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் தெரிவுக் கூட்டம் இன்று கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் நடைபெற்றது .

அங்கு தவிசாளர் தெரிவில்

7

# யாழ். மாநகர சபை தமிழரசுக் கட்சி வசம்

## மேயராக மதிவதனி தெரிவு





யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆட்சியை இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றியுள்ளது. அந்தக் கட்சியின் உறுப்பினர் திருமதி. மதிவதனி விவேகானந்தராஜா மேயராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாநகர சபையின் மேயரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை யாழ். மாநகர சபை சபா மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். மாநகர சபை 45 உறுப்பினர்களைக் கொண்ட சபையாகும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி 13 ஆசனங்களையும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் 12 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 10 ஆசனங்களையும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகியன தலா 4 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன தலா ஓர் ஆசனங்களையும் பெற்றுள்ளனர்.

7

## நல்லூர் பிரதேச சபை ஆட்சி தமிழ் மக்கள் கூட்டணி வசம்

### தவிசாளராக மயூரன் ஏகமனதாகத் தெரிவு



யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ். நல்லூர் பிரதேச சபையின் தவிசாளராகத் தமிழ் மக்கள் கூட்டணியின் உறுப்பினர்பத்மநாதன்மயூரன்ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

நல்லூர் பிரதேச சபையின் தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்று பிற்பகல் நல்லூர் பிரதேச சபையின் சபா மண்டபத்தில்

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவநந்தினி

7

## சாவகச்சேரி நகர சபை 'சைக்கிள்' வசம்

சாவகச்சேரி, ஜூன் 13

திருவுளச்சீட்டு ஊடாக சாவகச்சேரி நகர சபையின் ஆட்சியை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவை கைப்பற்றியுள்ளது.

சாவகச்சேரி நகர சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளர் தெரிவுகள் இன்று

7





## தமிழரசு நன்றி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 13

"யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆட்சியை இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்ற ஒத்துழைத்த எமது கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்." - என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் இன்று தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் தெரிவின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"யாழ்ப்பாணம் மாநகர சபையில் அதிக ஆசனங்களைத் தமிழரசுக் கட்சியே பெற்றுக்கொண்டது.

7

# போரா மாநாட்டுக்கு வசதிகளை வழங்க அரசாங்கத்தின் ஆதரவு

கொழும்பு, ஜுன் 13

இலங்கையில்நடைபெறவுள்ள உலகளாவிய போரா சமூகத்தினரின் ஆன்மீக மாநாடு மற்றும் கண்காட்சியை வெற்றிகரமாக நடத்துவதற்கு அவசியமான முழுமையான ஆதரவை வழங்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

உலகளாவிய போரா மாநாடு மற்றும் கண்காட்சி தொடர்பாக நேற்று (12) ஜனாதிபதி அலுவலகத்தில்நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதியின் செயலாளர் இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்

போரா சமூகத்தின் ஆன்மீக மாநாட்டுடன் இணைந்த வகையில் ஜுன் 27 முதல் ஜுலை 05 வரை போரா சமூகத்தின் ஆன்மீகத் தலைவர் கலாநிதி சையதினா முபத்தல் செய்புதீன் சாஹேப் பங்கேற்புடன் பம்பலப்பிட்டி போரா பள்ளிவாசல் மற்றும் இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு மண்டபத்தை மையப்படுத்தி, இந்த போரா மாநாடு மற்றும் கண்காட்சி நடைபெறும்.

இந்த கண்காட்சி மற்றும் மாநாட்டிற்காக இந்தியா உட்பட பல நாடுகளில் இருந்து சுமார் பதினைந்தாயிரம் போரா சமூகத்தினர் இந்நாட்டுக்கு வருகை தர இருப்பதால், அவர்களுக்கான விமான நிலைய வசதிகள் உட்பட அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் வழங்குதல் குறித்து இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில், வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி ரணராஜா, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே மற்றும் போரா சமூகத்தின் ஆன்மீகத் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)



## பேக்கரி பொருட்களின் விலை அதிகரிக்கப்படாது

மின் கட்டண உயர்வுக்கு ஏற்ப ரொட்டி உள்ளிட்ட பேக்கரி பொருட்களின் விலைகளை அதிகரிக்கும் எண்ணம் இல்லை என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜெயவர்தன தெரிவித்துள்ளார். ஊடகம் ஒன்றுக்கு இன்று (12) அளித்துள்ள செவ்வியொன்றின்பேதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். மேலும், உற்பத்திச் செலவில் அதிகரிக்கப்பட்ட மின்சாரக் கட்டணம் சேர்க்கப்பட்டாலும், தற்போது பேக்கரி பொருட்களின் விலையை அதிகரிக்கும் எண்ணம் இல்லை என்றும், அத்தகைய விலை களை அதிகரிக்க வேண்டாம் என்று பேக்கரி உரிமையாளர்களிடம் அவர் கேட்டுக கொள்கிறார் என்றும் ஜெயவர்தன தெரிவித்தார். பேக்கரி உற்பத்தியாளர்கள் இதுபோன்ற நேரங்களில் பொதுமக்களுக்குத் தெரியாமல் ரகசியமாக மற்ற பேக்கரி பொருட்களின் விலையை அதிகரிப்பதாகவும், ரொட்டியின் விலை அதிகரித்தால், விலை அதிகரிக்கப்பட்டதாகக் கருதப்படுவதால் ரொட்டியின் விலை தற்போதைய விலையிலேயே இருக்கும் என்றும் நுகர்வோர் கூறுகின்றனர். (ஐ)

மாபெரும் ROAD SHOW

எமது Nalin IT Exclusive நிறுவனத்தினால் இம்மாதம் ஜுன் 12, 13, 14 ஆம் திகதிகளில் Hikvision, Ezviz Camera களிற்கான 30% விசேட விலைத்தள்ளுபடியுடன் கூடிய Road Show நிகழ்வு ஸ்டான்லி றோட் முன்பாக நடைபெறவுள்ளது.

NALIN Information Technologies (Pvt) Ltd Computers of the North
No.51, Stanley Road, Jaffna. (Infront of BOC)
Contact No - 021 221 0404/ 076 359 4359 Email – nalin@nit.lk

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்ரீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிமை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவனற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# யாழ். பல்கலைக்கழகத்தின் இரண்டாவது சர்வதேச கல்வியியல் ஆய்வு மாநாடு

யாழ்ப்பாணப்பல்கலைக்கழக பட்டப்பின்படிப்புகள்பீடமும் கலைப்பீடத்தின்கீழ் செயற்படும் கல்வியியல் துறையும் இணைந்து முன்னெடுக்கும் இரண்டாவது சர்வதேச கல்வியியல் ஆய்வு மாநாடு - **2025(Second International Research Conference in Education (IRCE-2025)**, யூன் 14 (சனிக்கிழமை) மற்றும் 15 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய திகதிகளில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர், பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா அவர்களது தலைமையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். 'நிலைத்து நீடிக்கும் கல்விக்கான புத்தாக்க நடைமுறைகளை வெளிப்படுத்துதல் - சவால்கள் மற்றும் வாய்ப்புகள்' (**'Unravelling Innovative Practices for Sustainable Education – Challenges and Opportunities'**) என்ற தலைப்பில் ஒழுங்கமைக்கப்பட்டுள்து.

யூன் 14 ஆந்திகதி சனிக்கிழமை நடைபெறும் ஆரம்ப அமர்வில்(**Plenary session**)இரண்டு ஆதாரசுருதி உரைகள் இடம்பெறவுள்ளன. முதலாவது ஆதாரசுருதி உரையை (**Keynote speech**) அவுஸ்ரேலியா குயின்ஸ்லாண்ட் பல்கலைக்கழக பேராசிரியர் செல்வா செல்வானந்தன் அவர்கள் **'Interdisciplinary degree programs and Universities contribution to the re-development of N&E'** என்ற தலைப்பில் ஆற்றுகின்றார்.

இரண்டாவது ஆதாரசுருதி உரையை (**Keynote speech**) கொழும்புப் பல்கலைக்கழக கல்விப்பீடப் பீடாதிபதி கலாநிதி. கபில பண்டார அவர்கள் **'Education for Navigating Uncertainties toward a Sustainable Future'** என்ற தலைப்பில் ஆற்றுகின்றார்.

யூன் 15 ஆந்திகதி ஞாயிற்றுக்கிழமை இரண்டு கருப்பொருள் (**Thematic Sessions**) அமர்வுகள் நடைபெறும். கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர். சி.ரகுராம் அவர்களது தலைமையில் நடைபெறும் முதலாவது அமர்வு 'நிலைபேண்தகு பாடசாலைக் கல்வி (**Sustainable School Education**)' என்ற தலைப்பில் நடைபெறும்.

இதில் மூன்று துறைசார் நிபுணர்கள் உரையாற்றுகின்றனர்.

பட்டப்பின்படிப்புகள்பீட பீடாதிபதி சிரேஸ்ட பேராசிரியர். தி.வேல்நம்பி அவர்களது தலைமையில் இரண்டாவது கருப்பொருள் அமர்வு, 'உயர்கல்வியிலுள்ள சமகாலப் பிரச்சனைகள; (**Contemporary Issues in Higher Education**)' என்ற தலைப்பில் நடைபெறும்.

இதில் ஆறு துறைசார் நிபுணர்கள் உரையாற்றுகின்றனர்.

ஆய்வு மாநாட்டின்தொழில்நுட்ப அமர்வுகள்(**Technical Sessions**) யூன் 14 மற்றும் 15 ஆந்திகதிகளில மாலை அமர்வுகளாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்தில் நடைபெறும்.

எனவே இலங்கையின் பொதுக்கல்வி மற்றும் உயர்கல்வியின் பங்குதாரர்கள், ஆய்வாளர்கள் மற்றும் கல்விச்சமூகத்தினரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இரண்டாவது சர்வதேச கல்வியியல் ஆய்வு மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டுக்குழுவினர் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

யா/ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம் - புத்தூர்

பரிசளிப்பு விழாவும் "மகாஜனனம்" நூல் வெளியீடும் - 2025

காலம்: 16.06.2025 திங்கட்கிழமை
நேரம்: காலை 9.00 மணி
இடம்: பாடசாலை முத்துலிங்கம் மண்டபம்

தலைமை
திரு. பரமநாதன் கமலதாசன்
பாடசாலை முதல்வர்

பிரதம விருந்தினர்
கௌரவ திரு. ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன்
யாழ் / கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்,
கல்வி, உயர்கல்வி, மற்றும் தொழில் கல்வி சார்
ஆலோசனைக்குழு உறுப்பினர்

சிறப்பு விருந்தினர்
திரு. சந்திரமௌலீசன் லலீசன்
முதல்வர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்

கௌரவ விருந்தினர்கள்
திருமதி கீர்த்தனா ராகுலன்
கௌரவ திரு. துரைசிங்கம் சுரேஸ்குமார்
உப தலைவர், பழைய மாணவர் சங்கம்,
உறுப்பினர், வலிகிழக்கு பிரதேச சபை

அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்

பாடசாலைச் சமூகம்

## நுரைச்சோலை மின் பிறப்பாக்கி பராமரிப்பு பணியின் காரணமாக நிறுத்தம் - மின்சார சபை அறிவிப்பு!

நுரைச்சோலை 3வது மின் பிறப்பாக்கி பராமரிப்பு பணியின் காரணமாக இன்று (13) நள்ளிரவு முதல் நிறுத்தப்படும் என மின்சார சபை தெரிவித்துள்ளது.

இந்த பராமரிப்பு பணிகள் 25 நாட்களுக்கு நடைபெறும் என்று மின்சார சபை அறிவித்துள்ளதுடன், இதனால் தேசிய மின் கட்டமைப்பிற்கு 300 மெகாவோட் மின்சாரம் இழக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், 2 மின் பிறப்பாக்கிகள் செயல்பாட்டில் உள்ளதால் மின்சக்தி விநியோகத்தில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் தம்மிக விமலரத்ன தெரிவித்துள்ளார்.

## தெல்லிப்பளையில் ஆர்ப்பாட்டம்






யாழ்ப்பாணம் தெல்லிப்பளையில் வைத்தியசாலைக்கு முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம், வெள்ளிக்கிழமை (13) காலை முன்னெடுக்கப்பட்டது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மற்றும் பொது மக்களின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

புற்றுநோய் பிரிவின் மீது முன் வைக்கப்படும் அழுத்தம் மற்றும் வைத்திய நிர்வாகியை மாற்றுதல் உள்ளிட்ட காரணங்களை முன்வைத்து கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"எங்கள் வைத்தியசாலையை மீட்டு எடுப்போம்", "புற்று நோய் பிரிவை காப்பாற்றுவோம்" என்பது பிரதான கோசமாக முன்வைக்கப்பட்டது. (ஐ)

## குஜராத்தை உலுக்கிய விபத்து:

# நொறுங்கிய விமானம் கதறிய நெஞ்சங்கள்!










குஜராத்தின் ஆமதாபாத்தில் இருந்து, பிரிட்டன் தலைநகர் லண்டனுக்கு, 230 பயணியர் உட்பட 242 பேருடன் புறப்பட்ட, 'ஏர் இந்தியா' விமானம், மருத்துவக் கல்லூரி விடுதி மீது பயங்கரமாக மோதி விபத்துக்கு உள்ளானதில், குஜராத் முன்னாள் முதல்வர் விஜய் ரூபானி உட்பட 241 பேர் உயிரிழந்தனர். இந்த கோர விபத்தில், ஒரேயொரு பயணி மட்டும் அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்தார்.

இந்த சம்பவம் நடந்த இடத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் வெளியாகி உள்ளது. விமானம் மோதியதில் மேகனி நகரில் உள்ள மருத்துவ கல்லூரி விடுதி பலத்த சேதம் அடைந்தது. விபத்தில் உயிரிழந்தவர்களின் உடல்களை தன்னார்வலர்கள் மீட்டனர். ஏர் இந்தியா விமானம் விழுந்து நொறுங்கிய ஆமதாபாத்தின் பி.ஜே.மருத்துவ கல்லூரி விடுதி உள்ள பகுதியில் மீட்பு பணிகள் முழுவீச்சில் நடந்தன. (ஐ)

## இந்தியாவில் நிகழ்ந்த 10 மோசமான விமான விபத்துகள்



குஜராத்தின் அகமதாபாத்தில் இருந்து 242 பேருடன் லண்டன் செல்லும் ஏர் இந்தியா விமானம், புறப்பட்ட சில நிமிடங்களில் கீழே விழுந்து நொறுங்கி தீப்பிடித்தது. வியாழக்கிழமை ஏற்பட்ட இந்த பயங்கர விபத்தில் விமானத்தில் சென்ற 241 பேர் உயிரிழந்தனர். தரையில் விழுந்த விமானம், மருத்துவ கல்லூரி விடுதியில் மோதியதில், மருத்துவ மாணவர்கள் 10 பேரும் இந்த விபத்தில் பரிதாபமாக உயிரிழந்தனர். இந்தியாவில் இதற்கு முன்பு நிகழ்ந்த 10 மோசமான விமான விபத்துகளின் விவரம்...

1978-ம் ஆண்டு ஜனவரி 1-ம் திகதி மும்பையிலிருந்து 213 பேருடன் புறப்பட்ட போயிங் 747 விமானம் அரபிக் கடலில் விழுந்து விபத்துக்குள்ளானது. இதில் 213 பேர் உயிரிழந்தனர்.

1982-ம் ஆண்டு ஜூன் 21-ம் திகதி மும்பை விமான நிலையத்தில் ஏர் இந்தியா விமானம் விபத்துக்குள்ளாகியதில் 17 பேர் உயிரிழந்தனர்.

1988-ம் ஆண்டு அக்டோபர் 19-ம் திகதி அகமதாபாத்தில் இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் விபத்துக்குள்ளானதில், அதில் பயணம் செய்த 133 பேர் உயிரிழந்தனர்.

1982-ம் ஆண்டு ஜூன் 21-ம் திகதி மும்பை விமான நிலையத்தில் ஏர் இந்தியா விமானம் விபத்துக்குள்ளாகியதில் 17 பேர் உயிரிழந்தனர்.

1988-ம் ஆண்டு அக்டோபர் 19-ம் திகதி அகமதாபாத்தில் இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் விபத்துக்குள்ளானதில், அதில் பயணம் செய்த 133 பேர் உயிரிழந்தனர்.

1982-ம் ஆண்டு ஜூன் 21-ம் திகதி மும்பை விமான நிலையத்தில் ஏர் இந்தியா விமானம் விபத்துக்குள்ளாகியதில் 17 பேர் உயிரிழந்தனர்.

1988-ம் ஆண்டு அக்டோபர் 19-ம் திகதி அகமதாபாத்தில் இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் விபத்துக்குள்ளானதில், அதில் பயணம் செய்த 133 பேர் உயிரிழந்தனர். (ஐ)

## குஜராத் விமான விபத்தில் 241 பேர் உயிரிழப்பு



குஜராத்தின் அகமதாபாத்தில் இருந்து 242 பேருடன் லண்டன் செல்லும் ஏர் இந்தியா விமானம், புறப்பட்ட சில நிமிடங்களில் கீழே விழுந்து நொறுங்கி தீப்பிடித்தது. இந்த பயங்கர விபத்தில் குஜராத் முன்னாள் முதல்வர் விஜய் ரூபானி உட்பட விமானத்தில் சென்ற 241 பேர் உயிரிழந்தனர். தரையில் விழுந்த விமானம், மருத்துவ கல்லூரி விடுதியில் மோதியதில், மருத்துவ மாணவர்கள் 10 பேரும் இந்த விபத்தில் பரிதாபமாக உயிரிழந்தனர்.

குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் உள்ள சர்தார் வல்லபபாய் படேல் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து நேற்று பிற்பகல் 1.38 மணிக்கு ஏர் இந்தியா நிறுவனத்தின் பயணிகள் விமானம் லண்டனுக்கு புறப்பட்டது. இதில் 2 விமானிகள், 10 விமான ஊழியர்கள், 230 பயணிகள் என 242 பேர் பயணம் செய்தனர்.

இந்நிலையில், புறப்பட்ட 2 நிமிடங்களில் அகமதாபாத் மெஹானி நகர் குடியிருப்பு பகுதியில் விமானம் விழுந்து நொறுங்கி தீப்பிடித்தது. இதில், விமானத்தில் பயணம் செய்த 241 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். விமான பயணிகளில் 169 பேர் இந்தியர்கள். பிரிட்டனை சேர்ந்த 53 பேர், போர்ச்சுகல் நாட்டை சேர்ந்த 7 பேர், கனடாவை சேர்ந்த ஒருவரும் விமானத்தில் இருந்தனர். விமான ஊழியர்கள், பயணிகள் என மொத்தம் உள்ள 242 பேரில், 128 பேர் ஆண்கள், 100 பேர்பெண்கள், 14 பேர் குழந்தைகள் என தெரியவந்தது. குஜராத் முன்னாள் முதல்வர் விஜய் ரூபானியும் விமானத்தில் பயணம் செய்துள்ளார். விபத்தில் அவரும் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, விமானம் விழுந்து நொறுங்கிய குடியிருப்பு பகுதியில் அரசு மருத்துவ கல்லூரி மாணவர் விடுதி உள்ளது. இங்கு ஏராளமான மருத்துவ மாணவர்கள் மதிய உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்த நேரத்தில், விடுதியின் 4 மாடி கட்டிடம் மீது விமானம் மோதியதில், அந்த கட்டிடம் உடைந்து நொறுங்கியது. இதில்,இளநிலை, முதுநிலை மருத்துவ மாணவர்கள் 10 பேர் உயிரிழந்தனர். 50-க்கும் மேற்பட்ட மாணவர்கள் படுகாயம் அடைந்தனர். இதில் 25 பேர் தீவிர சிகிச்சை பிரிவில் உள்ளனர். (ஐ)



# இலட்சியம் நிச்சயம் வெல்லும்!

இந்த மண்ணில் பிறந்த அனைவருமே ஏதோ ஒரு காரணத்திற்காகத்தான் பிறக்கிறோம். சிலர் அதைக் கண்டறிந்து வெற்றி பெறுவர். சிலர் அதைப் பற்றிய எந்த எண்ணமும் இன்றி வாழ்ந்து மடிவர். நமக்கென ஒரு இலட்சியத்தோடு வாழும் போது நாம் வாழும் வாழ்க்கை அர்த்தமுள்ளதாகவும் சுவாரசியமாகவும் ஆகிறது. சலிப்பிற்கு இடமே இருக்காது. உங்கள் இலக்கைத் தேர்ந்தெடுக்க வயதோ, பொருளாதார நிலையோ, உடல் நிலையோ மற்ற எந்தச் சூழ்நிலையோ தடையே இல்லை. நீங்கள் அடைய விரும்பும் இலட்சியத்தை, நீங்கள் எவ்வளவு நேசிக்கிறீர்கள் என்பது மட்டும்தான் முக்கியம். சரி இலட்சியத்தோடு வாழ்வது எப்படிச் சுய நேசத்தை அதிகரிக்கும்? உங்கள் இலக்கை நோக்கி நீங்கள் நகர நகர, உங்கள் மேல் உங்களுக்கு மரியாதை கூடும். ஒவ்வொரு சிறிய வெற்றியும் உங்கள் நம்பிக்கையைக் கூட்டும். உங்களின் வெற்றி புதிய நட்புகளைத் தேடித்தரும். உங்கள் சிறகுகள் விரிவதை நீங்களே உணர ஆரம்பிப்பீர்கள். உங்கள் ஆரோக்கியத்தின் மேல் கவனம் கூடும். உங்களை நீங்களே இன்னும் நன்றாக மெருகேற்றிக் கொள்ள முயற்சி செய்வீர்கள்.




**புதிது புதிதாக ஏதும் முயற்சி செய்வது:**

நம்மை நாமே தினமும் புதுப்பித்துக் கொள்ள மிகவும் உதவும். புதிதாக ஒரு மொழி கற்றுக் கொள்ளலாம், ஆர்வமுள்ளவர்கள் இசை, நாட்டியம், ஓவியம் போன்றவற்றைக் கற்றுக் கொள்ளலாம். உடனே ஒரு சிலரின் மைண்ட் வொய்ஸ், "ஆம், இதெல்லாம் சின்ன வயசில் ஆசைப்பட்டேன், இப்போது கற்றுக் கொண்டு என்ன செய்வது?"

அப்போது எமக்கு வாய்ப்பு வசதியோ இல்லாமல் போய் இருக்கலாம். இன்று முடிகிறபோது செய்வதில் என்ன தவறு? ஒரு விஷயத்தைக் கற்றுக் கொள்ள ஆர்வமும் வாய்ப்பும்தானே அவசியம்? வயது ஒரு தடையே இல்லை. இன்றைய காலக்கட்டத்தில் எதை வேண்டுமானாலும் யூடியூப் கற்றுத் தருகிறது. அப்படி இல்லாவிடில் இருக்கும் இடத்தில் இருந்தே கற்றுக்கொள்ள நிறைய ஒன்லைன் வகுப்புகள் உள்ளன. இங்கே தேவை ஆர்வமும் கொஞ்சம் மினக்கெடலுமே. ஆனால் இது தரும் பரிசு மிகப் பெரிது. மனம் எப்போதும் உற்சாகத்தில் இருக்கும்.

அனைவருக்கும் ஒரு செயலைச் செய்ய முடியாததற்கு மிகவும் நியாயமான ஆயிரம் காரணங்கள் இருக்கும். ஆனால் தன்னை முழுதாக நேசிக்கும் ஒருவர் அந்தக் காரணங்களை எல்லாம் புறந்தள்ளி தனக்காக மினக்கெடுகிறோம் என்கிற மகிழ்ச்சியோடு இலட்சியத்தை நோக்கிச் செல்வார். இலட்சியத்தை நோக்கிப் பறக்க முடிந்தவர் பறக்கலாம், ஓட முடிந்தவர் ஓடலாம், நடக்க முடிந்தவர் நடக்கலாம். எதுவுமே முடியாதவர் தவழ்ந்தாவது செல்வர். ஏனெனில் காரணங்களைவிடத் தன்னையும் தன் இலட்சியத்தையும் அவர் மிகவும் நேசிப்பார்.



# எங்களுக்கு எந்தவித தொடர்பும் இல்லை ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் பற்றி அமெரிக்கா விளக்கம்

ஈரானுக்கு எதிராக இஸ்ரேல் தாக்குதலை தொடங்கியுள்ள நிலையில், இந்த தாக்குதலுக்கும், எங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ தெரிவித்துள்ளார்.

காசாவைச் சேர்ந்த ஹமாஸ் பயங்கரவாத அமைப்புக்கு ஆதரவாக தாக்குதல் நடத்தி வந்த ஈரான் மீது 'ஆபரேசன் ரைஸிங் லயன்' என்ற பெயரில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. குறிப்பாக அணுசக்தி நிலையங்களை குறிவைத்து சரமாரி தாக்குதல் நடத்தி வருகிறது. இந்தத் தாக்குதலில் ஈரான் துணை ராணுவப் படை தளபதி /ஹசைன் சலாமி உயிரிழந்தார். இதனால், மத்திய கிழக்கு நாடுகளிடையே பதற்றம் நிலவி வருகிறது.

ஈரானின் அணுசக்தி திட்டத்தின் மையப் பகுதியை குறிவைத்து இந்த தாக்குதல்நடத்தப்பட்டு வருவதாகவும், இஸ்ரேலுக்கு ஈரான் விடுத்த அச்சுறுத்தல் நீங்கும் வரை தாக்குதல் தொடரும் என்று இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

இதனிடையே, ஈரான் மீது இஸ்ரேல் நடத்தும் இந்த தாக்குதலுக்கும் தங்களுக்கும் தொடர்பில்லை என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இது குறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ கூறியதாவது ஈரானுக்கு எதிராக இஸ்ரேல் தாக்குதலை தொடங்கியுள்ளது. இந்த தாக்குதலுக்கும், எங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை. அந்த பிராந்தியத்தில் உள்ள அமெரிக்க படைகளின் பாதுகாப்பு பற்றியே எங்களின் கவலை உள்ளது. அமெரிக்க நிலைகளையோ, அமெரிக்க படைகளையோ ஈரான் இலக்காக வைக்கக் கூடாது. தங்களின் பாதுகாப்புக்காகவே இந்த தாக்குதலில் ஈடுபட்டுள்ளதாக அமெரிக்காவிடம் இஸ்ரேல் தெரிவித்துள்ளது, இவ்வாறு கூறினார்.

அதேபோல, ஐ.நா., கூறியிருப்பதாவது மத்திய கிழக்கு நாடுகளில் ராணுவ நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவதற்கு ஐ.நா.,பொதுச்செயலாளர் கண்டனம் தெரிவித்துள்ளார். அமெரிக்கா - ஈரான் இடையே அணுசக்தி ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தை நடந்து வரும் நிலையில், இஸ்ரேல் தாக்குதல் நடத்தியிருப்பது கவலையளிக்கிறது. ஐ.நா.,வின் சர்வதேச சட்டதிட்டங்களை உறுப்பு நாடுகள் கடைபிடிக்க வேண்டும். இருதரப்பினரும் தீவிர தாக்குதலை கைவிட வேண்டும், இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)





## ஈரானின் அணு, ஏவுகணைத் தளங்களைத் தாக்கிய இஸ்ரேல்

ரானின் அணு, ஏவுகணைத் தளங்களை இன்று அதிகாலை இஸ்ரேல் தாக்கியுள்ளது.

இத்தாக்குதல்களில் ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவலர் படைகளின் தளபதி, அணு விஞ்ஞானிகள் இருவரும் கொல்லப்பட்டுள்ளனர்.

இரண்டு சுற்றுத் தாக்குதல்கள் நடைபெற்று தற்போது மூன்றாவது சுற்றுத் தாக்குதல்கள் நடந்த வண்ணமுள்ளன.

## இஸ்ரேல் தாக்குதலில் ஈரானின் முக்கிய தளபதி பலி



இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் ஈரானின் இஸ்லாமியப் புரட்சிகர காவல்படை (IRGC) தளபதி ஜெனரல் /ஹசைன் சலாமி உயிரிழந்துள்ளார் என ஈரானிய ஊடகங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

ஈரானின் தலைநகர் தெஹ்ரான் உட்பட பல இடங்களை இலக்காகக் கொண்டு இஸ்ரேல் இந்த வான்வழித் தாக்குதல்களை நடத்தியது.

இதில் இஸ்ரேலின் முக்கிய இலக்காக இருந்தது ஈரானின் மிகவும் சக்திவாய்ந்த இராணுவப் பிரிவாகக் கருதப்படும் ஈரான் இஸ்லாமியப் புரட்சிகர படையின் தலைமையகம் ஆகும்.

மேலும், ஈரானிய இராணுவத் தலைவர் மொஹமட் பாகெரி உள்ளிட்ட இராணுவத் தலைவர்களும், ஈரானின் அணு ஆயுதத் திட்டத்துடன் தொடர்புடைய விஞ்ஞானிகள் பலரும் இந்தத் தாக்குதல்களின் இலக்குகளாக இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈரான் தற்போது தனது வான்வெளி எல்லையை மூடியுள்ளது.

மேலும், "டஜன் கணக்கான இலக்குகள்" தாக்கப்பட்டதாகவும், கொல்லப்பட்டவர்களில் உயர்மட்ட இராணுவத் தலைவர்களும் அணு விஞ்ஞானிகளும் அடங்குவதாகவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ஐ)

# ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் எதிரொலி கச்சா எண்ணெய் விலை 12 சதவீதம் அதிகரிப்பு


ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருவதால், கச்சா எண்ணெய் விலை 12 சதவீதம் அதிகரித்துள்ளது. இதனால் பெட்ரோல், டீசல் விலை தாறுமாறாக உயரும் வாய்ப்பு உள்ளது.

ஈரானில் 'ழிநசயவழைெ சுளைபைெ டுழைெ என்ற ராணுவ நடவடிக்கையை இஸ்ரேல் தொடங்கியுள்ளது. மத்திய கிழக்கு நாடுகளில் பதட்டங்கள் அதிகரித்து வரும் நிலையில், இஸ்ரேல் விமானப்படை ஈரானுக்குள் ஒரு தாக்குதலை நடத்தி வருகிறது. ஈரானில் அணுநிலையங்களை குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது.

அதேநேரத்தில் ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்கள் ஏற்படக்கூடும் என்று எதிர்பார்த்து இஸ்ரேல் அவசரநிலையை அறிவித்தது. இரண்டு அமெரிக்க அதிகாரிகள் ஈரானில் இஸ்ரேல் தாக்குதல்களை நடத்தியது என்பதை உறுதிப்படுத்தினர்.

இந்நிலையில், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர தொடங்கி உள்ளது. கச்சா எண்ணெய் விலை 12மூக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. ஒரு பேரல் கச்சா எண்ணெய் விலை 77 டாலர் என்ற நிலையை எட்டி உள்ளது. போர் பதற்றம் அதிகரிக்கும் பட்சத்தில் விலை மேலும் அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

இது குறித்து ஆய்வாளர்கள் கூறியதாவது: உலகின் மூன்றாவது பெரிய கச்சா எண்ணெய் உற்பத்தியாளரான ஈரான் மீதான இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருவது உற்பத்தியை பாதிக்கும். விலையும் தாறுமாறாக உயரும். இதன் தாக்கம் உலகம் முழுவதும் இருக்கும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர். இந்தியா உள்ளிட்ட நாடுகளில் பெட்ரோல் மற்றும் டீசல் விலை உயரும் சூழல் உருவாகும். (ஐ)



## யாழ்.மாநகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் மேயர் பதவிக்குத் திருமதி. மதிவதனி விவேகானந்தராஜாவின் பெயரும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் சார்பில் மேயர் பதவிக்குக் கனகையா ஸ்ரீகிருஷ்ணாவின் பெயரும் பரிந்துரைக்கப்பட்டன.

தேசிய மக்கள் சக்தியின் சார்பில் மேயர் பதவிக்கு எவரும் பரிந்துரைக்கப்படவில்லை.

மேயர் தெரிவு பகிரங்க வாக்கெடுப்பு மூலம் இடம்பெற்றது. அதன்போது, தமிழரசுக் கட்சி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட திருமதி. மதிவதனி விவேகானந்தராஜாவுக்கு வாக்களித்தனர். அதன்மூலம் அவர் 19 வாக்குகளைப் பெற்று மேயராகத் தெரிவானார்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் சார்பில் மேயர் பதவிக்குப் போட்டியிட்ட கனகையா ஸ்ரீ கிருஷ்ணா 16 வாக்குகளை மாத்திரம் பெற்றார். அவருக்கு ஆதரவாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

அதேவேளை, துணை மேயருக்கான வாக்கெடுப்பில் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் இம்மானுவேல் தயாளன் 19 வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்தார்.

மேயர், துணை மேயர் தெரிவுகளுக்கான பகிரங்க வாக்கெடுப்பில் தேசிய மக்கள் சக்தியினர் நடுநிலை வகித்தமை குறிப்பிடத்தக்கது.

## நல்லூர் பிரதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாபு தலைமையில் நடைபெற்றது.

இதன்போது தவிசாளர் மற்றும் உப தவிசாளர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இதன்படி தமிழ் மக்கள் கூட்டணியின் தவிசாளர் பதவிக்கு மயூரனின் பெயர் சபையில் முன்மொழியப்பட்டது.

வேறு போட்டியாளர் இன்மையால் தவிசாளராக மயூரன் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அதையடுத்து உப தவிசாளராகத் தமிழரசுக் கட்சியின் இராஜமனோகரன் ஜெயகரன் தெரிவு செய்யப்பட்டார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர் கணேஷ், தவிசாளர் மற்றும் உப தவிசாளர் தெரிவுகளின் போது சபையில் இருக்கவில்லை.

20 உறுப்பினர்களைக் கொண்ட நல்லூர் பிரதேச சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 7 ஆசனங்களையும், தமிழ் மக்கள் கூட்டணி 6 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 3 ஆசனங்களையும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி 3 ஆசனங்களையும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஓர் ஆசனத்தையும் கொண்டுள்ளன.

தமிழ் மக்கள் கூட்டணியும், இலங்கைத் தமிழரசுக் கட்சியும் நல்லூர் பிரதேச சபையில் ஆட்சி அமைப்பது தொடர்பில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நேற்றுமுன்தினம் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சாவகச்சேரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிற்பகல் 3 மணியளவில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவநந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

தவிசாளர் பதவிக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் அ.கயிலாயபிள்ளையும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவை சார்பில் வ.சிறிபிரகா/ம் முன்மொழியப்பட்டு பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதன்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தவிசாளர் வேட்பாளர் அ.கயிலாயபிள்ளை தமிழரசுக் கட்சி மற்றும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களுடைய ஆதரவுடன் 7 வாக்குகளைப் பெற்றார்.

அதேநேரம் தமிழ்த் தேசியப் பேரவையின் தவிசாளர் வேட்பாளர் வ.சிறிபிரகா/க்கும் 7 வாக்குகள் கிடைத்தன.

அதன்பின்னர் திருவுளச்சீட்டு ஊடாக தவிசாளர் தெரிவு செய்யும் நடைமுறைக்குச் செல்லப்பட்டதில் தமிழ்த் தேசியப் பேரவையின் தவிசாளர் வேட்பாளர் வ.சிறிபிரகாஷ் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

மேலும் உப தவிசாளர் தெரிவிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் அ.பாலமயூரனும், தமிழ்த் தேசியப் பேரவை சார்பில் ஞா.கிஷோரும் போட்டியிட்டு சம வாக்குகளைப் பெற்றிருந்த நிலையில் திருவுளச்சீட்டு மூலம் தமிழ்த் தேசியப் பேரவையின் உறுப்பினர் கிஷோர் தெரிவு செய்யப்பட்டார்.

வாக்கெடுப்பின் போது தேசிய மக்கள் சக்தி நடுநிலைமை வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவையின் சார்பில் சாவகச்சேரி நகர சபைக்குப் பிரேரிக்கப்பட்ட பெண் உறுப்பினர் ஒருவருக்கு உயர்நீதிமன்றத்தால் இன்று இடைக்காலத் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே திருவுளச்சீட்டு நடைமுறை வரை செல்ல வேண்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மண்முனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருவர் போட்டியிட்டார்கள். சுயேச்சை பந்து அணியில் இளையதம்பி திரேசகுமாரன், இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் கோபாலபிள்ளை சுரேந்திரன் ஆகியோர் போட்டியிட்டார்கள் .

அதன்போது 9 வாக்குகளைப் பெற்ற சுயேச்சை அணி சார்பில் போட்டியிட்ட திரேசகுமாரன் தவிசாளராகத் தெரிவானார். மற்றவருக்கு ஆறு வாக்குகள் கிடைக்கப் பெற்றன.

உப தவிசாளராகக் கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு படகு கட்சியின் உறுப்பினர் கனகநாயகம் கபில்ராஜ் ஏகமனதாகத் தெரிவானார்.

மொத்தத்தில் அங்கு சுயேச்சை அணியும் கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு படகு அணியும் சேர்ந்து ஆட்சி அமைத்தமை குறிப்பிடத்தக்கது.

தேசிய மக்கள் சக்தி நடுநிலையாக இருந்தது.

கடந்த தடவை ஆட்சியில் இருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சி இம்முறை தோல்வியைத் தழுவியது.

## தமிழரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதனடிப்படையில் மேயர் மற்றும் துணை மேயரை நிறுத்தி வெற்றியையும் பெற்றுள்ளோம். .

இதற்கு ஒத்துழைத்த எமது கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களுக்கும் நாம் இந்த நேரத்தில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த உள்ளூராட்சி சபைகளில் எந்தத் தரப்பினர் அதிகூடிய ஆசனங்களைப் பெற்றிருக்கின்றார்களோ அவர்களே ஆட்சி அமைக்க வேண்டும் என்று ஆரம்பத்திலேயே நாங்கள் கூறியிருந்தோம்.

அந்தக் கோட்பாட்டுக்கு அமைவாக யாழ். மாநகரத்தில் நாங்கள் செயற்பட்டிருக்கின்றோம். இந்தக் கோட்பாட்டுக்கு வேறு சில கட்சிகளும் இணங்கியிருந்தன. எங்களோடு நடைபெற்ற பேச்சுவார்த்தைகளிலும் அவர்கள் அதனைத் தெரிவித்திருந்தனர். ஆனால், அந்தக் கோட்பாட்டை அவர்கள் தற்போது மீறியுள்ளனர்." - என்றார்.

# நுவரெலியா மக்களுக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை

தற்போது நிலவி வரும் சீரற்ற காலநிலையால் வீதிகளில் மரங்கள் முறிந்து விழுதல் மற்றும் மண்சரிவு அபாயம் ஏற்படுவதனால் வாகனங்களை வாகன சாரதிகள் மிகுந்த அவதானத்துடன் செலுத்த வேண்டும் என பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நுவரெலியா பதுளை பிரதான வீதியின் மாநகரசபை மைதானத்திற்கு அருகாமையில் மரம் ஒன்று முறிந்து வீழ்ந்துள்ளமையினால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் இன்று (13) காலை இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மரம் முறிந்து விழுந்த சந்தர்ப்பத்தில் ஒரு மருங்கில் மாத்திரம் போக்குவரத்து இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் பிரதேச வாசிகளுடன் நுவரெலியா மாநகரசபை தீயணைப்பு பிரிவினர் இணைந்து முறிந்து வீழ்ந்துள்ள மரத்தை உடனடியாக வெட்டி அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

அதன்பின் போக்குவரத்து வழமைக்கு திரும்பியது என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அவதானமாக இருக்குமாறு..

தொடர்ச்சியாக நுவரெலியா மற்றும் நானுஓயா பகுதிகளில் பலத்த காற்றுடன் மழை பெய்து வருகிறது. இதனால் ஏராளமான இடங்களில் மரங்கள் மற்றும் மரக்கிளைகள், மின்கம்பிகள் மீது விழும் சம்பவம் காரணமாக அடிக்கடி மின்தடை ஏற்பட்டு வருகின்றது.

அத்துடன் நுவரெலியா - ஹற்றன் பிரதான வீதியில் நானுஓயா பகுதியில் கற்பாறைகளுடன் மண்சரிவு ஏற்படும் அபாயம் ஏற்பட்டு வீதி சேதமடைந்து காணப்படுவதால் மண்சரிவு சமிக்ஞைகள் வீதியோரத்தில் காட்சிபடுத்தப்பட்டுள்ளது.


எனவே இவ்வீதியில் பயணிக்கும் வாகனங்கள் மற்றும் பாதசாரிகள் அவதானமாக இருக்குமாறு நானுஓயா போக்குவரத்து பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

(ஐ)

# மூதூரில் அதிகரிக்கும் காட்டு யானைகளின் அட்டகாசம்







மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள நல்லூர் கிராமத்திற்குள் இன்று (13) அதிகாலை உட்புகுந்த காட்டு யானைகள் வீடொன்றை சேதப்படுத்தியுள்ளதோடு வீட்டில் காணப்பட்ட உபகரணங்களையும் சேதப்படுத்தியுள்ளது.

இதன்போது பயன்தரு மரங்களையும் காட்டு யானைகள் சேதப்படுத்தியுள்ளன.

தமது கிராமத்தில் மின்சார இணைப்பு இல்லை என்பதோடு காட்டு யானைகளின் அட்டகாசத்தால் வீட்டில் அச்சத்துடனே உறங்குவதாகவும் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். இந்நிலையில், தமக்கு அரசாங்கம் நஷ்ட ஈடு தராவிட்டாலும் யானை கிராமத்திற்குள் உள் நுழையாத வகையில் யானை பாதுகாப்பு வேலி அமைத்துத் தருமாறு மூதூர் - நல்லூர் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஐ)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.06.2025 வெளியிடப்பெற்றது.